செ.வெ.எண் : 27 /ஜூன் நாள் : 13.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான அரசு தங்கும் விடுதிகளில் சேர விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் பள்ளி செல்லும் குழந்தைகளுக்காக 22 மாணவர் விடுதிகளும், 13 மாணவியர் விடுதிகளும், கல்லூரி செல்லும் இளைஞர்களுக்காக 3 மாணவர் விடுதிகளும், 2 மாணவியர் விடுதிகளும் என மொத்தம் 40 மாணவ, மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

பள்ளி விடுதிகளில் 4ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/மாணவியர்களும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களும் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். அனைத்து விடுதி மாணவ/மாணவியருக்கும் உணவும் தங்கும் வசதியும் இலவசமாக அளிக்கப்படும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ-மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும்.

விடுதியில் சேர்வதற்கு பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 5 கி.மீ-க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதிக்காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் 11.07.2017க்குள்ளும், கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் 21.07.2017க்குள்ளும் சம்மந்தப்பட்ட விடுதி/ காப்பாளர்/ காப்பாளினியிடம் அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ,மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம், ஆதார் அட்டை, வங்கிக்கணக்கு எண் விவரம் மற்றும் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களை கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இன மாணவ/மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**